# திம்புலாகல பிரதேச சபை

# பொலன்னறுவை மாவட்டம்

----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் மீளாய்வண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 திசெம்பர் 22 திகதியி வரை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2015 அக்டோபர் 23 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டது.

1.2 கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயலாற்றுகை மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------------------------------------------------

1.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சமர்பிக்கப்பட்டிருந்த 03 ஐய வினாக்களுக்கு 2015 ஆகஸ்ட் 30 திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 496,663,011 ஆகும்.

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை

--------------------------------------------------------------------------

(i) 33 கொடுப்பனவு உறுதிச்சான்றுகளின் மூலம் கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்ட ரூபா 1,901,958 தொகை தொடர்பாக தேவையான சான்றுகள் போதியளவினதாக சமர்பிக்கப்படாமையால் அச் செலவுகளை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் ரூபா 247,000 தொகை ஒன்று செலவிடப்பட்டு பல்வேறு நபர்களுக்கு மற்றும் நலன்புரி சங்கங்களுக்கு பண்டங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்பண்டங்கள் பெற்றமைக்காகவோ அல்லது குறிப்பிட்ட நபர்கள் அவற்றை பெற்றுக்கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்திய பதிவேடு அல்லது ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.

(iii) தலைவரினால் பயன்படுத்தப்படும் கப் வண்டி திருத்த வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் தலைவரின் தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவதற்காக எரிபொருளுக்காக ரூபா 94,720 தொகை ஒன்று

செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட ஓட்ட அட்டவணைகள் மற்றும் எரிபொருள் பில் பத்திரங்கள் கணக்காய்வின் போது சமர்பித்திருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

---------------------

2.2 வருமான நிருவாகம்

-----------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான | திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி | 17,432 | 11,634 | 5,798 |
| (ii) | வாடகை | 8,958 | 7,314 | 1,644 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 834 | 198 | 635 |
| (iv) | சேவைக் கட்டணம் | 1,926 | 1,012 | 913 |
| (v) | ஏனைய வருமானங்கள் | 601 | 207 | 394 |

2.1.2 நீதிமன்றத் தண்டப்பணம்

--------------------------------------

பல்வேறு கட்டளை சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 3,581,469 இற்கான தொகை ஒன்று பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டி இருந்தது.

2.1.3 முத்திரைக் கட்டணம்

---------------------------------

2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 775,500 இற்கான முத்திரைக் கட்டண வருமானம் பிரதான செயலாளரிடம் கிடைக்க வேண்டியிருந்தது. அத்துடன் 2014 ஆண்டிற்கான முத்திரை கட்டண வருமானம் எதனையும் பெற்றுக் கொள்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

2.1.4 நிலுவை நீர்க் கட்டணம்

-------------------------------------

04 நீர்த் திட்டங்களின் மூலம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 5,097,588 ஆக காணப்பட்டதுடன் 2013 ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 5,802,441 ஆக காணப்படாமையால்

நிலுவை நீர்க் கட்டணம் அறவீடு செய்யும் முன்னேற்றம் மீளாய்வாண்டின் போது 1.2% ஆகிய மிகவும் குறைவான பெறுமதியினால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

(அ) சபையின் வருமான நிருவாகி தம்பனகடுவ பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்திருந்த போதிலும் அவ் அலுவலரின் பொறுப்பில் காணப்பட்ட 16 வெளிக்கள பில் புத்தகங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 31 திகதி வரை திருப்பி எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 19 செலவு விடயங்கள் தொடர்பாக மதிப்பீட்டு ஏற்பாட்டுத் தொகையில் 50% முதல் 100% வரை சேமிப்பு ஒன்றும் மற்றும் 6 செலவு விடயங்கள் தொடர்பாக ஏற்பாட்டு தொகையில் 100% முதல் 430% வரை மிகைத்தல் காணப்படமையால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பதில் பலவீனம் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(இ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கையில் காசு மீதி ரூபா 712,883 காணப்பட்ட போதிலும் 2015 ஜனவரி 01 திகதி அப்பணத்தில் இருந்து ரூபா 550,264 தொகை ஒன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீதித் தொகையான ரூபா 162,619 தொகையினை அத் திகதியிலேயே கணக்கீடு செய்யப்படாமல் இடையிடையே பல சந்தர்ப்பங்களில் கணக்கீடு செய்யும் முறைமை ஒன்றினை கடைபிடித்திருந்தது.

(ஈ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 396 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள ஆனால் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத 06 மாத காலத்தை விஞ்சிய ரூபா 767,394 பெறுமதியின் 35 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 02 வருடங்களை கடந்துள்ள ரூபா 276,810 இற்கான வைப்புக்களை இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 570 இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2014 பெப்ரவரி 20 முதல் 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 818 CFL மின்குமிழ்கள் கொள்வனவு செய்து அவற்றில் 712 மின்குமிழ்கள் வழங்கியிருந்த போதிலும் வழங்கப்பட்டவைகள் தொடர்பாக விபரங்கள் ஏதும் பதியப்பட்டிருக்கவில்லை. பதிவேடுகளின் பிரகாரம் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் மாதம் 30 வரை 106 CFL மின்குமிழ்கள் மீதியாக காட்டப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியாக அவ்வாறான மீதி ஒன்று காணப்பட்டது.

(எ) திவிநெகும அபிவிருத்தி பணிப்பாளர் நாயகத்தினால் 2014 நவம்பர் 17 ஆம் திகதி பொதுமக்களின் பயன்பாட்டுக்காக பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 398,520 பெறுமதியான 360 கல்வனயிஸ் கொடிக் கம்பங்கள் 2014 திசெம்பர் 16 திகதி பிரதேசிய சபை மந்திரிமார்களினால் மற்றும் தலைவரினால் எடுத்து செல்லப்பட்டுள்ளது எனினும் கணக்காய்வுத் திகதியாக 2015 ஆகஸ்ட் 30 திகதி வரையும் அந்த கல்வனயிஸ் கம்பங்களை திருப்பி எடுப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தபடாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------

அரிசி மா உற்பத்தியினை பிரசித்திப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றின் அமுல் நடத்துவதற்காக வட மத்திய மாகாண முதலமைச்சினால் திம்புலாகல பிரதேச சபைக்கு 2004 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 541,000 தொகை பெறுமதியான அரிசி மா உற்பத்தி உபகரணத் தொகுதி ஒன்று மாதாந்த வாடகை அடிப்படையில் மகவெலி அதிகார சபையில் இருந்து பெற்றிருந்த 2 கடைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அக் கட்டடம் அமைந்துள்ள பகுதியில் மூன்று கட்ட மின்சார வசதி காணப்படாமையால் அதனை செயற்படுத்த முடியாதிருந்தது. இந்த உபகரண தொகுதி மீளாய்வாண்டு அளவில் 10 வருடங்களை மிகைத்த காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

3.3 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இன் பிரகாரம் மற்றும் 2007 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 1528/21 கொண்ட வடமத்திய மாகாண சபை முதலமைச்சரின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாவிடினும் 2014 ஜனவரி 01 திகதிய இலக்கம் என்சீபீ/எல்ஜீ/ஏ/8/21v தொகுதி கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தை அடிப்படையாக வைத்து தலைவர் மற்றும் மந்திர்மார்களுக்கு எரிபொருட்கள், தொலைபேசி மற்றும் காகிதாகிகள் கொடுப்பனவு ஆக ரூபா 537,500 தொகை ஒன்று மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பல்வேறு உபசரணை செலவுகளை மீளாய்வாண்டின் போது ரூபா 45,211 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1957 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 132(ஒ) மற்றும் (ஓ) இன் பிரகாரம் பல்வேறு நன்கொடைகள் மற்றும் பல்வேறு கொண்டாட்டங்களுக்கான செலவுகள் மேற்கொள்வதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 122,941 செலவிடப்பட்டுள்ளது.

(ஈ) 2007 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 1528/21 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் விதி 1(i) இன் பிரகாரம் தலைவர் ஒருவருக்கு சபையின் கடமை பிரயாணங்களுக்காக ஒரு மாதத்திற்கு மேற்கொள்ளக் கூடிய எரிபொருள் வரையரை டீசல் லீட்டர் 400 ஐ மிகைக்காது இருக்க வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது அவ்வரையறை மிகைத்து பயன்படுத்தியிருந்த 738 லீட்டர் எரிபொருளுக்காக ரூபா 89,338 இற்கான சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

(உ) 2007 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 1528/21 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் விதி 1(iii) இன் பிரகாரம் பிரதேச சபைக்கு வாகனம் ஒன்று காணப்படாத சந்தர்ப்பத்தில் எரிபொருள் வரையறையுள் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றிருக்காமல் தனியார் வாகனத்திற்காக சபை நிதியத்தில் இருந்து 400 லீட்டர் டீசலுக்கு சமமான தொகை ஒன்று செலவு மேற்கொள்ள முடியும். அவ்வரையறையினை மிகைத்து ரூபா 193,500 தொகை ஒன்று தனியார் வாகனங்களுக்காக சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நடைமுறை கோவையின் விதி இலக்கம் 154 இன் பிரகாரம் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள ஒருவரை மீண்டும் பணியில் அமர்த்த அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு மாத்திரமே

அதிகாரம் சாட்டப்பட்டிருந்த போதிலும் சபை தீர்மானம் ஒன்றின் பிரகாரம் 2013 அக்டோபர் 03 திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்காக ஓய்வு பெற்ற தொழிநுட்ப அலுவலர்(சிவில்) 11(அ) தரத்தை சேர்ந்த அலுவலர் ஒருவரை நியமனம் செய்து, மீளய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகள் ஆக ரூபா 213,000 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(எ) பிரதேச சபையின் கப் வண்டி ஒன்று(தொகுதி வாகனம்) இற்கான 2014 பாதிட்டின் மூலம் மாதத்திற்கு எரிபொருள் வரையறை 250 லீட்டர் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்கு முரணாக அவ் வரையறையை மிகைத்து ரூபா 105,801 பெறுமதியான 880 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2013 மகநெகும கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிருவாக செலவுக்காக வழங்கியிருந்த பணத்தில் இருந்து நிர்மாண வேலை கடமைகள் மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப அலுவலர் மற்றும் ஏனைய 03 அலுவலர்களுக்கு எதுவித சட்ட ஏற்பாடுகளும் இன்றி ரூபா 63,957 இற்கான தொகை ஒன்று படியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் xiv உப பிரிவு 3.1 இல் சுட்டிக் காட்டியுள்ள ஏற்பாடுகளுக்கு மாற்றமாக வெலிகந்த பிரதேச சபைக்கு போவதற்கும் வருவதற்குமான பிரயாண செலவு மற்றும் இணைந்த படிகளாக ரூபா 39,200 தொகை ஒன்று மீளாய்வாண்டின் போது சபை செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

3.4 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணிக் கோப்பு மற்றும் தற்போது இணைந்துள்ள பதவியணி பற்றிய தகவல்கள் கீழ்வருமாறு,

| பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடப் பதவியணி | மிகைப் பதவியணி |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட தரம் | 01 | 01 | - | - |
| மூன்றாம் தரம் | 01 | - | 01 | - |
| இரண்டாம் தரம் | 14 | 06 | 08 | - |
| ஆரம்ப தரம் | 32 | 31 | 01 | - |
| அமைய, பதிலீட்டு, தற்காலிக, ஒப்பந்த, மாதாந்த படி அடிப்படையில் | - | - | - | 41 |
| | 48 | 38 | 10 | 41 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக 05 அபிவிருத்தி அலுவலர்களும், தொழில்நுட்ப அலுவலர் மற்றும் நூலக காப்பாளர் ஒருவரும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) சபை நிதியத்தில் இருந்து சம்பளம் பெறும் அமைய / தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட்டிருந்த 41 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட

பதவியணிக்கு உட்படுத்தப்படாமல் மிகையாகக் காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டது.

4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

--------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

1989 ஏப்ரல் 15 திகதி இலக்கம் 584/5 கொண்ட பிரதேச சபை விதிக் கோவையின் 11 அத்தியாயத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீடு தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 தொழிற்பாட்டுத் திட்டம்

-------------------------------------

2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதி சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்ட கால நோக்குடன் பிரதேச சபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் வெற்றி கொள்வதனை இலக்காகக் கொண்ட செயற்பாடுகள் அடங்கிய வருடாந்த தொழிற்பாட்டு திட்டம் ஒன்று, மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

------------------------------

மீளாய்வாண்டின் போது மாகாண அகக் கணக்காய்வு மற்றும் நுண்ணாய்வுத் திணைக்களம் அல்லது வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுபாடு